கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்

அ.வ.எண். 243/2020

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 07–ம் நாள் செவ்வாய்கிழமை வா.சா.3

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | தொழில் | |
| த/பெ | சுப்பையயன் | கிராமம் | |
| வயது | | தாலுகா | |
| | | மாவட்டம் | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம்

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 10 வருடங்களாக ட்ரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறேன். AA டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் நடத்தி வருகிறேன். அதைத் தவிர எண்ணெய் வியாபாரம் செய்து வருகிறேன். வாதி என்னுடைய உறவினர் என்று சொன்னால் சரியல்ல. வாதியை எனக்கு விஜயகுமார் மூலமாக தெரியும். தற்போது சாட்சி ரகுநாதனை தனக்கு தெரியாது என்று சாட்சியமளிக்கிறார். முருகசாமி என்பவரை விஜயகுமார் சொல்லி எனக்கு தெரியும். மேற்படி விஜயகுமார் தான் வழக்கு கடனுறுதி சீட்டை எழுதியவர் என்றால் சரிதான். நானும் விஜயகுமாரும் ஒன்றாக படித்தோம். 1984 ஆம் வருடம் முதல் 1989 ஆம் வருடம் வரை ஒன்றாக படித்தோம். கடந்த 07.01.2018 ம் தேதி விஜயகுமாரும் முருகசாமியும் என்னுடைய வீட்டிற்கு வந்து கடனுறுதி சீட்டை எழுதுவதற்காக அழைத்தார்கள். தாவா கடனுறுதி சீட்டு ரகுநாதன் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. நான் வாதியின் வீட்டிற்கு அதற்கு முன்பு சென்றதில்லை. முருகசாமி வீட்டிற்கும் சென்றதில்லை அவர்கள் வீடு எனக்கு தெரியாது. கடலூறுர் சீட்டு எழுதப்பட்டபோது மணி சுமார் 9 அல்லது ஒன்பதரை

இருக்கலாம். கடனுறுதி சீட்டை முருகசாமி கொண்டு வந்தார். 12 லட்சம் ரூபாயை 500 ரூபாய் தாள்களாக கொடுத்தார். 31.12.2019 ஆம் தேதி மேற்படி முருகசாமி இறந்த விபரம் தெரியுமா என்றால் அன்றைய தேதியில் தெரியாது வழக்கு தாக்கல் செய்த பிறகு சொன்னார்கள். முருகசாமி இறப்பதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வாத நோய் தாக்கி படுத்த படுக்கையாக இருந்தார் என்று சொன்னால் சரி அல்ல. முருகசாமி வாதிடம் எந்த தொகையும் வாங்கவில்லை என்றாலும் கடனுறுதி சீட்டு எதையும் எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.01.07 19:11:58 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.